## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.9

## 2019, பிப்ரவரி 13, புதன்கிழமை

## விளம்பி, மாசி 1, திருவள்ளுவர் ஆண்டு - 2050

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை **10.00** மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**" அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தால் செயின். "**

(செய்ய வேண்டிய செயல்கள் பற்றி நன்றாக சிந்தித்து தக்க இடம் அறிந்து செய்தால் அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு துணை வேண்டாம்.)

### 1. வினாக்கள் - விடைகள்

வரிசை எண்கள் 61 முதல் 70 வரையுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் வினவப்பட்டு விடையளிக்கப்பட்டன.

### 2. தகவல் கோரல்

1) " தமிழ்நாட்டில் குடிநீர் பற்றாக்குறை " குறித்து திரு. மு.க. ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் திரு. கரி. இராமசாமி ஆகியோர் தகவல் கோரினர்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

2) " நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி வடக்குபொய்கைநல்லூரைச் சேர்ந்த திரு. சரவணன் என்பவர் மின்சாரம் தாக்கி மரணம் அடைந்துவிட்டதால் அவரது குடும்பத்தினருக்கு நிவாரண நிதி வழங்குவது " குறித்து திரு. உ. மதிவாணன் அவர்கள் தகவல் கோரினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

3) " ஆலங்குளம் தொகுதியில் உள்ள பீடித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் தொழிலாளர் ஓய்வு ஊதியம் முறையாக வழங்குவது " குறித்து டாக்டர் (திருமதி) பூங்கோதை ஆலடி அருணா அவர்கள் தகவல் கோரினார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

### 3. பேரவை விதி 110-இன் கீழ் அறிக்கை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–இன் கீழ் அறிக்கை ஒன்றினை பேரவைக்கு அளித்தார்.

தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி தொடர விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தையும், கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை ஏற்றமடையச் செய்ய விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பாக செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு, இத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதுடன், நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் வண்ணம், “அசீல்” இனக் கோழிகளை கிராமப்புற மக்களுக்கு வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், வேளாண் தொழிலின் உப தொழிலான கால்நடைத் தொழிலை மேன்மைப்படுத்தி விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித்தரும் வகையில் கால்நடை பராமரிப்புத் துறையின் உட்கட்டமைப்புகளையும், தொழில்நுட்பங்களையும் மேம்படுத்த போதுமான நிதி ஆதாரங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண்–79ஐ ஒட்டி அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்கு சொந்தமான **900** ஏக்கர் பரப்பில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய உலகத் தரம் வாய்ந்த ஆசியாவிலேயே பெரிய ஒருங்கிணைந்த பல்துறை பல்நோக்குடன் கூடிய நவீன கால்நடைப் பூங்கா ஒன்று சுமார் **396** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று பிரிவுகளாக அமையவுள்ள இப்பூங்காவின் முதலாவது பிரிவில் நவீன வசதிகளைக் கொண்ட கால்நடை மருத்துவமனை, நவீன பண்ணை முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் காட்டும் வகையில் கறவை மாட்டுப்பண்ணை, உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, புலிக்குளம் மற்றும் பர்கூர் ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்கப் பண்ணை, செம்மறி மற்றும் வெள்ளாட்டின பண்ணை, பன்றிகள், கோழியினப் பிரிவுகள், மற்றும் நாட்டின நாய் இனங்களான இராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி ஆகியவற்றுக்கான இனப்பெருக்கப் பிரிவுகளைக் கொண்ட கால்நடை பண்ணை வளாகம் அமைக்கவும், இரண்டாம் பிரிவில், பால், இறைச்சி மீன் மற்றும் முட்டை போன்ற உணவுப்பொருட்களை பாதுகாத்து பதப்படுத்தவும், அவற்றிலிருந்து பல்வேறு உபபொருட்கள், மதிப்பு கூட்டிய பொருட்களை தயார் செய்யவும், அவற்றை சந்தைப்படுத்த வசதி ஏற்படுத்தவும், மூன்றாவது பிரிவில் பயிற்சி, விரிவாக்கம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவோருக்கான பயிலரங்கத்துடன் (Business Incubation Centre) பல்வேறு அம்சங்கள் கொண்ட வளாகம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்த நவீன பூங்கா தமிழகத்தில் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி மேற்கொள்ளவும், உலக நாடுகளில் உள்ள கால்நடை மருத்துவம் படிக்கின்ற மாணவர்களுக்கும், அங்கே வந்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும், நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். உலகத்தரம் வாய்ந்த இவ்வளாகம், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில், அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்ட வளாகமாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

“மரபுத் திறன் மிக்க நாட்டின மற்றும் கலப்பினக் காளைகளைக் கொண்டு 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்” என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது 2019–2020 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்த உறைவிந்து உற்பத்தி நிலையம் இந்த வளாகத்திலேயே அமையப்பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகப்பெரிய அளவில் இப்பூங்கா அமைக்கப்படுவதால், இதனை நிர்வகிப்பதற்கு, தொடர்புடைய துறை இயக்குநர்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் மாண்புமிகு அம்மாவின் பெயரால் அமைந்துள்ள மீன்வள பல்கலைக்கழகத்தின் பதிவாளர்கள் ஆகியோரை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களாக கொண்டு, ஒரு சங்கம் அமைக்கப்பட்டு, பதிவு செய்யப்படும். இத்திட்டத்தை ஒருங்கிணைத்து சிறப்பாக செயல்படுத்திட கால்நடை பராமரிப்பு கூடுதல் இயக்குநர் பதவி உருவாக்கப்படும். மேலும், சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தினசரி நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் மற்றும் திரு. அ. மருதமுத்து ஆகியோர் தமது நன்றியினை தெரிவித்தார்கள்.

**4. <u>பேரவைக்கு ஓர் அறிவிப்பு</u>**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை பேரவைக்கு அளித்தார்:–

"காகிதமில்லா சட்டமன்றம் எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக, 2018–2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 63 முதல் 66 வரையிலான 4 அறிக்கைகள்; பொதுநிறுவனங்கள் குழுவின் 73 மற்றும் 74 வரையிலான 2 அறிக்கைகள்; அரசு உறுதிமொழிக் குழுவின் 40 முதல் 56 வரையிலான 17 அறிக்கைகள்; மனுக்கள் குழுவின் 3 முதல் 6 வரையிலான 4 அறிக்கைகள் மற்றும் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை ஆகியவற்றின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பதையும், இவ்வறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதையும், இதன் அச்சிடப்பட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறாது என்பதையும், மேல் நடவடிக்கைக்காக சம்மந்தப்பட்ட துறைகளுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்."

**5. <u>குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்</u>**

**(1) <u>பொதுக் கணக்கு குழுவின் அறிக்கைகள் அளித்தல்.</u>**

திரு. துரைமுருகன், பொதுக் கணக்கு குழுவின் தலைவர் அவர்கள் 2018-2019-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் அறுபத்து மூன்றாவது முதல் அறுபத்து ஆறாவது வரையிலான (பதினைந்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

**(2) <u>பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல்.</u>**

திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள் 2018-2019-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் எழுபத்து மூன்றாவது மற்றும் எழுபத்து நான்காவது வரையிலான (பதினைந்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

**(3) அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல்.**

திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள் 2018-2019-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் நாற்பதாவது முதல் ஐம்பத்து ஆறாவது வரையிலான (பதினைந்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

**(4) மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல்.**

திரு. சு. ராஜேந்திரன், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள் 2018-2019-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் மூன்றாவது முதல் ஆறாவது வரையிலான (பதினைந்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

**(5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல்.**

திரு. ப. சத்திய நாராயணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள் 2018-2019-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் முதலாவது (பதினைந்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளித்தார்.

**6. அரசினர் சட்டமுன்வடிவு ( அறிமுகம் செய்தல் )**

**(1) 2019-ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**(2) 2019-ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**(3) 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**(4) 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**(5) 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

திரு. எஸ். ரகுபதி அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை அறிமுக நிலையில் எதிர்ப்பதாக தெரிவித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**(6) <u>2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு</u>**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**7. <u>2019-2020-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை</u>**

2019-2020-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். (மூன்றாம் நாள்)

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்:–

**16. திரு. கரி. இராமசாமி**
**17. திரு. துரைமுருகன்**

பேரவை பிற்பகல் **2.29** மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் **2019-**ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் **14**-ஆம் நாள் **வியாழக்கிழமை காலை 10.00** மணிக்குக் கூடும்.

**கி. சீனிவாசன்,**
**செயலாளர்.**